<u>DEPOSITION OF WITNESS</u>
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, UDUMALPET

SESSIONS CASE No: 126/2016

Deposition of Witness for : P.W.14

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆர்.முருகானந்தம் | Calling | |
| Father's Name | : | Taluk | : |
| Age | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27.07.2023

**முதல் விசாரணை –**

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். இன்றைய தினம் LW 27 அரசு தரப்பு சாட்சி 14 ஆக விசாரிக்கப்பட்டார்)**

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது குறிச்சிகோட்டை உடுமலைபேட்டையில் வசிக்கிறேன். மோட்டார் பிட்டர் வேலை செய்கிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். பாலாஜி மற்றும் மகேஸ்வரி ஆகியோர் குறிச்சிகோட்டை தோட்டத்துசாளையில் குடியிருந்தார்கள். அவர்கள் கணவன் மனைவி ஆவார்கள். 03.02.2015 அன்று மேற்படி பாலாஜி என்பவர் சுகுணா சிக்கன் கடைக்கு கறி வெட்டும் வேலைக்கு சென்று விட்டார். அன்று மாலை அவர் வீட்டிற்கு வரவில்லை. மறுநாள் பாலாஜியின் பெற்றோர், மனைவி மற்றும் ஊரில் உள்ளவர்கள் பாலாஜியை காணவில்லை என்று விசாரித்தார்கள். 05.02.2015 அன்று தினந்தந்தி பேப்பரில் பாலாஜி மர்ம நபர்களால் வெட்டி கொலை செய்யப்பட்டார் என்று செய்தி வந்திருந்தது. 2 நாள் கழித்து பாலாஜி மனைவி, சந்திரசேகர், கார்த்தி ஆகியோர் சேர்ந்து பாலாஜியை தூங்காவி பக்கத்தில் உள்ள பாறையூர் அழைத்து சென்று வாய்க்கால்

மேட்டில் மது கொடுத்து பாலாஜியை கொலை செய்து விட்டதாக பேசிக்கொண்டார்கள். 12.02.2015 அன்று நானும் சுப்ரமணியும் குறிச்சிகோட்டை ரோட்டில் இருந்தபோது தாராபுரம் காவல் ஆய்வாளர், ஒரு பெண் எஸ்ஐ, மற்றும் 2 பெண் காவலர்கள் வந்து மகேஸ் வீடு எங்குள்ளது என்று கேட்டார்கள். நான் மேற்படி போலீசாரை மகேஸ்வரி வீட்டிற்கு அழைத்து சென்றேன். போலீசார் பாலாஜியின் பெற்றோரிடம் விசாரித்தார்கள். மகேஸ்வரி பொள்ளாச்சி அருகே நல்லாம்பள்ளி சென்று விட்டதாக பாலாஜியின் பெற்றோர் போலீசாரிடம் தெரிவித்தார்கள். போலீசார் என்னையும் சுப்ரமணியையும் நல்லாம்பள்ளி அழைத்து சென்றார்கள். நல்லாம்பள்ளியில் மகேஸ் அப்பா கருப்பசாமி வீட்டிற்கு போலீசார் எங்களை அழைத்து சென்றார்கள். பெண் உதவி ஆய்வாளர் மகேஸ்வரியிடம் விசாரித்தார். மகேஸ்வரி தனக்கு பாலாஜியுடன் திருமணம் செய்வதற்கு முன்பே சந்திரசேகருடன் பழக்கும் இருந்தது என்றும், பாலாஜியுடன் வாழ தனக்கு மனக்கஷ்டம் இருப்பதாகவும், தூங்காவி பாறையூர் வாய்க்கால் மேட்டிற்கு பாலாஜியை அழைத்து சென்று சந்திரசேகர் மற்றும் கார்த்தியுடன் சேர்ந்து தாங்கள் 3 பேரும் ஏற்கனவே திட்டமிட்டபடி பாலாஜியை கொலை செய்து வாய்க்காலில் போட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை உதவி ஆய்வாளர் மடிக்கணிணி மூலம் பதிவு செய்தார். அதை பிரிண்ட் எடுத்து என்னிடமும் மகேஸ்வரி மற்றும் சுப்ரமணியத்திடமும் கையெழுத்து வாங்கினார்கள். அந்த **ஒப்புதல் வாக்குமூலம் அசாஆ.14.** மகேஸ்வரி பயன்படுத்திய வெள்ளைநிற செல்போனை ஆய்வாளர் என் முன்னிலையிலும் சுப்ரமணி முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அந்த **வெள்ளை நிற செல்போன் சாபொ.12.**

கைப்பற்றுதல் மகஜரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார். கைப்பற்றும் மகஜரில் என்னிடமும் சுப்ரமணியத்திடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அசாஆ**.15. என்னையும் சுப்ரமணியத்தையும் மகேஸ்வரியையும் போலீசார் அலங்கியம் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள் நடந்ததை சொன்னேன்.

<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்து போன பாலாஜி எனக்கு உறவினரா என்றால் ஒரே ஊர்காரர் ஒரே இனத்தை சேர்ந்தவரா என்றால் ஆமாம். நான் பாலாஜி வீட்டிற்கு அடிக்கடி செல்வேனா என்றால் போகமாட்டேன். குறிச்சிகோட்டை பஸ்ஸ்டாப்பில் நின்றிருந்த போது போலீசார் என்னை அழைத்து கொண்டு பாலாஜி வீட்டிற்கு சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை எத்தனை மணிக்கு அழைத்து சென்றார்கள் என்றால் காலை 7.30 மணிக்கு அழைத்து சென்றார்கள். மகேஸ்வரி வீடு எனக்கு தெரியாத நிலையில் எப்படி மகேஸ்வரி வீட்டிற்கு போனோம் என்றால் விசாரித்து தெரிந்து கொண்டு போனோம். போலீசார் தான் மகேஸ்வரி வீடை விசாரித்து கொண்டு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு பாலாஜி வீட்டிற்கு போனோம் என்றால் காலை 7.40 மணிக்கு போய்விட்டோம். எவ்வளவு நேரம் மகேஸ்வரி வீட்டில்போலீசார் விசாரித்தார்கள் என்றால் போலீசார் போனதும் மகேஸ்வரியை கேட்டார்கள் அவர் வீட்டில் இல்லை என்றதும் திரும்பி விட்டோம். பாலாஜி வீட்டில்

இருந்து நல்லாம்பள்ளி எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 25 – 30 கிமீ தூரம் இருக்கும். மகேஸ்வரி தோட்டத்துசாளையிலா அல்லது ஊரில் குடியிருந்தாரா என்றால் ஊருக்குள் குடியிருந்தார். எத்தனை மணிக்கு நல்லாம்பள்ளி சென்றோம் என்றால் காலை 9.10 மணிக்கு நல்லாம்பள்ளி சென்றோம். கையெழுத்து எத்தனை மணிக்கு போட்டோம் என்றால் காலை 11.45 மணிக்கு கையெழுத்து போட்டோம். நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் மகஜரில் ஒரு கையெழுத்து , ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒரு கையெழுத்து போட்டேன். நல்லாம்பள்ளி பொள்ளாச்சியிலிருந்து 20 கிமீ தூரத்திலும் உடுமலையிலிருந்து 30 கிமீ தள்ளி உள்ளது என்றால் சரிதான். நல்லாம்பள்ளி பொள்ளாச்சி – உடுமலை சாலையில் 6 கிமீ தள்ளி உள்ளே உள்ள கிராமம் என்றால் சரிதான். மகேஸ்வரி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டதை நான் பார்த்தேனா என்றால் ஆமாம் என்முன்னிலையில் தான் கையெழுத்து போட்டார். எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் ஒரு கையெழுத்து போட்டார். நல்லாம்பள்ளியிலிருந்து அலங்கியம் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மதியம் 1.30 மணிக்கு சென்றோம். நான் சொல்வது போல் மகேஸ்வரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுத்து கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நல்லாம்பள்ளியிலிருந்து பொள்ளாச்சிக்கோ, உடுமலைபேட்டைக்கோ சென்று வர 1 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். மடிகணிணியில் பதிவு செய்ததை யார் பிரிண்ட் எடுத்து வந்தார்கள் என்றால் போலீசார் எடுத்து வந்தார்கள் யார் என்று குறிப்பிட்டு தெரியாது. நான் சொல்வது போல் மகேஸ்வரியிடம் இருந்து செல்போன் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி செல்போனுக்கும் மகேஸ்வரிக்கும் எந்த வித தொடர்பும் சம்பந்தமும்

இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன பாலாஜி என் ஊர்காரர் என்பதாலும் நெருங்கிய உறவினர் என்பதாலும் போலீசார் கேட்டக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

1 , 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம் வி.பி.சுகந்தி
கூடுதல் மாவட்ட நீதிபதி
உடுமலைபேட்டை (பொறுப்பு)